(இ) இராஜபாளையம் ஸ்ரீ ஷண்முகர் மில்ஸ் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வாழ்வளிப்பது குறித்து

திரு. ஏ. அ. சுப்பராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் ஜில்லா, இராஜபாளையம் நகரிலுள்ள ஸ்ரீ சன்முகர் மில்ஸ் என்ற நூற்பாலை 18---7—1970-ல் மூடப்பட்டதின் காரணமாக வேலையிழந்து தவிக்கும் 410 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வாழ்வளிப்பதற்கு அந்த மில்லை அவசரமாக திறக்கும்பொருட்டு அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, Sree Shanmugar Mills, Rajapalayam, is under closure with effect from 18th July 1970. Financial difficulties and labour troubles are stated to be the reasons for the closure. Even though the licensed capacity of the mills is, 13,200 spindles, the installed capacity is 10,156 spindles only.

The concerned officers discussed the case with the management and tried to persuade the management to revive the mill. But the management is not prepared in reopen the mills on the ground that the loss sustained during the last 6 years since the time they took the mills on lease in 1964, is as high as Rs. 15 lakhs, and that they are not in a position to pay even their Employees' State Insurance/Employees' Provident Fund contributions and electricity consumption charges. As there is no prospect of the mills being re-opened by the present management and as the workmen numbering nearly 400 have been thrown out of employment, the Government are examining whether the Government of India may be moved for an investigation of the affairs of the mill under the Industries (Development and Regulation) Act, 1951, and for taking over the mills under that Act.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரை கேட்டு அது வரும் வரையில் இவர்களுடைய வாழ்க்கை என்ன நிலையில் இருக்கும் என்று சொல்லமுடியாத சூழ்நிலையில் அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களோடு அரசாங்கம் பேசி, அரசாங்கமும் ஒத்துழைத்து பண உதவி செய்யப்படுமானால், அவர்களே இருந்து நடத்துவதற்கு இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி இண்டரிமாக அரசாங்கமே ஓரளவுக்கு உதவி செய்து, அவர்களோடு பேசி அந்த மில்லை ஓட்டுகின்ற நிலையை ஏற்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த ஆலைக்குச் சொந்தக்காரர்களும், தொழிலாளர்களும் சேர்ந்து இப்படிப்பட்ட ஒருமித்த முடிவுக்கு வருவார்களேயானால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம். அப்படியில்லை என்று சொல்லி விட்டால், சட்டப்படி நடவடிக்கை எடுப்பது தவிர வேறு வழியில்லை.